**முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர்.**

2025 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 01 ம் நாள், பி.சா.2 என்பவரின் சாட்சியம் உரிமையியல் நடைமுறைச் சட்டம், ஆணை 18 விதி 4(2)ன் படி முதலாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி அவர்கள் முன்னிலையில் 1969 ம் ஆண்டின் 44 வது சட்டப் படி பிரமாணத்தின் பேரில் பதிவு செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| **அ.வ.எண்.** | **:** | **221/2024 & 690/2022** |
| **பி.சா.** | **:** | **2** |
| **பெயர்** | : | திரு. செல்லப்பன் |
| **தந்தை பெயர்** | : | திரு. குருநாதசாமிகவுண்டர் |
| **வயது** | : | 85 |
| **முகவரி** | : | கவுண்டம்பாளையம் |
| **தொழில்** | : | விவசாயம் |

---

**நாள்: 01.09.2025**

**சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம்: 11.45 a.m. – 12.40 p.m.**

**முதல் விசாரணை :**

எனக்கு அ.வ.எண்.690/2022 ல் உள்ள வாதி மற்றும் 1, 2, 8 முதல் 10 பிரதிவாதிகள் உறவினர்கள். நான் 20.08.2025 ம் தேதி தாக்கல் செய்துள்ள என் பிரமாண வாக்குமூலத்தை என்னுடைய சாட்சியத்தின் ஒரு பகுதியாக வாசித்து கொள்ள வேண்டுகிறேன். எனக்கு வழங்கப்பட்ட ஆதார் அடையாள அட்டை நகல் **பி.சா.ஆ.26**.

01.09.2025 – அ.வ.எண். 221/2024 பி.சா.2 திரு.செல்லப்பன்

அ.வ.எண். 690/2022 ல் 1, 2, 6, 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

சின்னராசப்ப கவுண்டருக்கு சுமார் 25 ஏக்கர் நிலம் இருந்தது. அது அவர் சுயமாக சம்பாதித்தது. சின்ன ராசாப்ப கவுண்டருக்கு ஐந்து ஆண் மக்கள், நான்கு பெண் மக்கள். ஆண் மக்களில் நாச்சியப்பன் மற்றும் பரமசிவம் உயிருடன் இல்லை. பெண் மக்கள் 4 பேரும் உயிருடன் உள்ளார்கள். சின்ன ராசா கவுண்டர் வாதிக்கு பிரித்துக் கொடுத்த 2.07 ஏக்கர் போக மீதி சொத்தை நாச்சியப்பன், ராமசாமி மற்றும் பழனிச்சாமி ஆகியோருக்கு தனித்தனியாக உயில் எழுதி கொடுத்தார். அந்த உயில்கள் 1998 ல் எழுதப்பட்டன. என்னிடம் காட்டப்படும் 18.06.1998 தேதியிட்ட உயில் ராமசாமி பெயருக்கு சின்ன ராசப்ப கவுண்டர் எழுதி வைத்த உயில். அந்த உயிலில் நான் இரண்டாவது சாட்சியாக கையெழுத்திட்டுள்ளேன். முதல் சாட்சியாக பரமசிவம் கையெழுத்திட்டுள்ளார். உயில் ஆவணத்தில் உள்ள ரேகை சின்ன ராசப்ப கவுண்டரின் ரேகை. உயிலில் கையெழுத்து போட சின்ன ராசப்ப கவுண்டர் தான் என்னை அழைத்தார். உயில் எழுதுவதற்கு மூன்று நாட்களுக்கு முன்பாக என்னை அழைத்தார்.

<u>01.09.2025 – அ.வ.எண். 221/2024 பி.சா.2 திரு.செல்லப்பன்</u>

உயில் எழுதுவதற்கு நானும் சின்ன ராசப்பகவுண்டரும், பரமசிவமும், கந்தசாமியும் சென்றோம். சின்ன ராசப்ப கவுண்டர் கையில் பத்திரம் எடுத்து வந்தார். நாங்கள் பத்திரம் எழுதும் அலுவலகத்திற்கு சென்றோம். அந்த அலுவலகம் பொள்ளாச்சி ரோட்டில் பல்லடத்தில் உள்ளது. சின்ன ராசப்பகவுண்டர் பத்திர எழுத்தரிடம் ஆவணங்களை காட்டி உயில் எழுதும் படி கூறினார். ராமசாமி மற்றும் பழனிச்சாமி பெயருக்கு உயில் எழுத சொன்னார். நாச்சப்பனுக்கும் உயில் எழுத சொன்னார். எழுதிய உயிலை படித்துக் காட்டும் படி சின்ன ராசப்ப கவுண்டர் சொன்னார். வெள்ளைத்தாளில் எழுதப்பட்ட உயிலை படித்துக் காட்டியவுடன் சரியாக இருப்பதாக கூறி பத்திரத்தில் டைப் அடிக்கும்படி கூறினார். டைப் அடித்த உயிலையும் படித்து காட்டும்படி கூறினார். படித்துக் காட்டியதை கேட்டு சரியாக இருப்பதாக கூறி எங்கள் முன்னிலையில் சின்ன ராசப்ப கவுண்டர் கைரேகை வைத்தார். கைரேகை வைத்ததை நான் நேரடியாக பார்த்தேன். முதல் சாட்சியாக பரமசிவம் கையெழுத்து போட்டார். இரண்டாவது சாட்சியாக நான் கையெழுத்து போட்டேன். பத்திர பதிவு அலுவலகத்திற்கு பகல் 2 மணிக்கு சென்றோம். சின்ன ராசப்ப கவுண்டர் பத்திரத்தை சார்

பதிவாளரிடம் கொடுத்தார். உயில் ஆவணம் பதிவு செய்யப்பட்டது. சார்பதிவாளர் அலுவலகத்திலும் நான் இரண்டாவது சாட்சியாக கையெழுத்து போட்டேன். முதல் சாட்சியாக கந்தசாமி கையெழுத்து போட்டார். 18.06.1998 தேதியிட்ட சின்னராசப்பகவுண்டர் 1ம் பிரதிவாதி ராமசாமி பெயருக்கு எழுதி வைத்த பதிவு செய்யப்பட்ட உயில் **பி.சா.ஆ.27**. அதே தேதியில் 2ம் பிரதிவாதி பழனிசாமி பெயருக்கும் சின்ன ராசப்ப கவுண்டர் உயில் எழுதினார். அந்த உயிலிலுள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். முதல் சாட்சியாக பரமசிவம் கையெழுத்திட்டுள்ளார். உள்ளஅதில் உள்ள கைரேகை சின்ன ராசப்ப கவுண்டரின் கைரேகை. அந்த உயில் எழுதவும் சின்ன ராசப்பகவுண்டர் தான் என்னை அழைத்தார். அன்று வீட்டில் இருந்து காலை சுமார் 11 மணிக்கு கிளம்பினோம். பத்திர எழுத்தர் அலுவலகத்திற்கு சென்றோம். அதே தேதியில் மூன்று உயில்களை சின்ன ராசப்ப கவுண்டர் எழுதினார். மூன்று உயில்களையும் சின்ன ராசப்ப கவுண்டர் படித்து பார்த்து தான் கைரேகை வைத்தார். மூன்று உயில்களையும் பதிவு செய்ய சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றோம். மூன்று உயில்களிலும்

**01.09.2025 – அ.வ.எண். 221/2024 பி.சா.2 திரு.செல்லப்பன்**

நான் இரண்டாவது சாட்சியாக சார் பதிவாளர் அலுவலகத்தில் கையெழுத்து போட்டுள்ளேன். முதல் சாட்சியாக கந்தசாமி கையெழுத்து போட்டுள்ளார். 18.06.1998 தேதியிட்ட சின்னராசப்பகவுண்டர் 2ம் பிரதிவாதி பழனிசாமி பெயருக்கு எழுதி வைத்த பதிவு செய்யப்பட்ட உயில் **பி.சா.ஆ.28**. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 13.07.2000ம் தேதியில் சின்ன ராசப்பகவுண்டர் பரமசிவம் பெயருக்கு எழுதிய உயில். அந்த உயிலில் நான் முதல் சாட்சியாக கையெழுத்திட்டுள்ளேன். இரண்டாவது சாட்சியாக நாச்சப்பன் கையெழுத்து போட்டுள்ளார். நாச்சப்பன் தற்போது உயிருடன் இல்லை. உயிலில் உள்ள கைரேகை சின்ன ராசப்ப கவுண்டர் வைத்த கைரேகை. அந்த உயில் எழுதுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பாக சின்ன ராசப்ப கவுண்டர் என்னை அழைத்தார். உயில் எழுதுவதற்கு நான், நாச்சப்பன் மற்றும் சின்ன ராசப்பகவுண்டர் சென்றோம். அன்றும் சின்ன ராசப்ப கவுண்டர் பத்திரத்தை கையில் கொண்டு வந்தார். பல்லடத்தில் உள்ள பத்திரம் எழுதும் அலுவலகத்திற்கு சென்றோம். சின்னராசப்பகவுண்டர் பத்திரத்தை படித்துக் காட்டும் படி கூறினார். அவர் படித்துக் காட்டிய

<u>01.09.2025 – அ.வ.எண். 221/2024 பி.சா.2 திரு.செல்லப்பன்</u>

பிறகு ஒரு வெள்ளை பேப்பரில் ஆறு ஏக்கருக்கு சற்று குறைவான பூமியை பரமசிவம் பெயருக்கு உயில் எழுதும் படி கூறினார். வெள்ளை பேப்பரில் எழுதியதை படித்துக் காட்டும் படி கூறினார். படித்துக் காட்டிய பிறகு சரியாக இருப்பதாக ஒரு பச்சை பேப்பரில் டைப் அடிக்கும் படி கூறினார். டைப் அடித்ததை படித்துக் காட்டும்படி கூறினார். படித்துக் காட்டியது சரியாக இருப்பதாக கூறி சின்ன ராசாப்ப கவுண்டர் கைரேகை வைத்தார். கைரேகை வைத்ததை நான் பார்த்தேன். என்னிடம் காட்டப்படும் உயிலில் உள்ள கைரேகை சின்ன ராசப்ப கவுண்டரின் கைரேகை. பின்னர் சின்ன ராசப்பகவுண்டர் உயிலை பதிவு செய்வதற்கு சின்ன ராசப்ப கவுண்டர் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றார். நானும் நாச்சப்பனும் உடன் சென்றோம். சார்பதிவாளர் அலுவலகத்தில் உயிலை பதிவு செய்யும்போது முதல் சாட்சியாக நான் கையெழுத்திட்டுள்ளேன். இரண்டாவது சாட்சியாக நாச்சப்பன் கையெழுத்து போட்டுள்ளார். உயிலில் நானும் நாச்சப்பனும் கையெழுத்து போடுவதை சின்ன ராசப்ப கவுண்டர் பார்த்தார். உயில் எழுதும் போது சின்ன ராசப்ப கவுண்டர் நல்ல உடல் நிலையில் இருந்தார். 2010 ல் தான் சின்ன ராசப்ப கவுண்டர் இறந்தார்.

**01.09.2025 – அ.வ.எண். 221/2024 பி.சா.2 திரு.செல்லப்பன் அ.வ.எண்.690/2022ல் 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**.

சின்னராசப்பகவுண்டர் எனக்கு அத்தை கணவர். என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.5 முதல் 8ல் ஒட்டப்பட்டுள்ள புகைப்படம் சின்னராசப்பகவுண்டரின் புகைப்படம் என்று சொன்னால் என்னால் தெளிவாக பார்க்க முடியவில்லை. என் அத்தை இறந்த பிறகு சின்ன ராசப்ப கவுண்டரை நாச்சப்பன் தான் உடன் வைத்து பராமரித்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. பரமசிவம் தான் பராமரித்து வந்தார். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை நானே தான் சொன்னேன். எனக்கு 1968ல் திருமணம் நடந்தது. மாதம் தேதி ஞாபகம் இல்லை. எனக்கு 3 குழந்தைகள். முதல் குழந்தை பிறந்த தேதி ஞாபகம் இல்லை. சின்ன சாமிக்கு ஒதுக்கியதாக கூறப்படும் பூமியின் சர்வே எண்கள் 572, 573, 575 மற்றும் 218. இந்த நான்கு சர்வே எண்களில் ஒவ்வொரு சர்வே எண்ணிலும் எவ்வளவு விஸ்தீரணம் பூமி ஒதுக்கப்பட்டது என்று கேட்டால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் எந்த பூமியையும் கிரையம் வாங்கவும் இல்லை. கிரையம் கொடுக்கவும் இல்லை. வாதிக்கு ஒதுக்கியதாக கூறப்படும்

<u>01.09.2025 – அ.வ.எண். 221/2024 பி.சா.2 திரு.செல்லப்பன்</u>

2.07 1/2 ஏக்கரை வாதியால் தற்போது விற்க முடியுமா என்று கேட்டால் எனக்கு ஞாபகம் இல்லை. அந்த பூமிக்கு யார் பெயரில் வருவாய்த்துறை ஆவணங்கள் உள்ளன என்று கேட்டால் எனக்கு ஞாபகம் இல்லை. ஊர் நத்தத்தில் இருப்பதாக கூறப்படும் வீடு சின்ன ராசப்ப கவுண்டர் பிறந்து வளர்ந்த வீடு என்று சொன்னால் சரியல்ல. அது அவர் சுயமாக சம்பாதித்த சொத்து. நத்தம் என்பது 10 நபர்கள் வசிக்கும் பகுதி. நத்தத்தில் உள்ள வீடு சின்ன ராசா கவுண்டருக்கு பாத்தியப்பட்ட வீடு என்பது சம்பந்தமாக ஆவணம் எதுவும் நான் பார்த்ததில்லை. அந்த வீட்டில் சின்ன ராசப்ப கவுண்டரின் வாரிசுகள் அனைவருக்கும் உரிமை உள்ளது என்று சொன்னால் எல்லோரும் குடியிருந்து வந்தார்கள். தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. தற்போது வரை அந்த வீட்டிற்கு சின்ன ராசப்ப கவுண்டர் பெயரில் தான் பட்டா உள்ளது என்று சொன்னால் எனக்கு ஞாபகம் இல்லை. 1979 ல் பொங்கலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பாக சமரசம் பேசியதாக கூறுவதற்கு ஆவணம் எதுவும் இல்லை என்று சொன்னால் எனக்கு ஞாபகம் இல்லை. உயில்கள் எழுதியதாக கூறப்படும் சமயத்திற்கு முன்பே அந்த பேச்சுவார்த்தை நடந்தது. நான் சொல்வது போல 1979 ல்

**01.09.2025 – அ.வ.எண். 221/2024 பி.சா.2 திரு.செல்லப்பன்**

பொங்கலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பாக எந்த சமரச பேச்சுவார்த்தையும் நடக்கவில்லை என்றும் நான் வாதி கேட்டுக் கொண்டதன் பெயரில் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**16 ,17 பிரதிவாதிகள் மேற்கண்ட 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்கள்.**

**8 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** .

1979 ல் சமரசம் பேசியதாக கூறுவதற்கு எழுத்துப்பூர்வமான ஆவணம் எதுவும் இல்லை. அந்த பேச்சுவார்த்தை சம்பந்தமாக அதன் பிறகும் எந்த ஆவணமும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. எந்த பூமி சம்பந்தமாக சமரசம் பேசப்பட்டது என்று கேட்டால் சர்வே எண்கள் 572, 573, 575, 218 ல் உள்ள சொத்துக்கள் சம்பந்தமாக சமரசம் பேசப்பட்டது. ஒவ்வொரு சர்வே எண்ணிலும் எவ்வளவு பூமி ஒதுக்கப்பட்டது என்று எனக்கு ஞாபகம் இல்லை. அந்த சொத்து முழுவதும் சின்னராசப்பகவுண்டரின் சொத்து. சின்ன ராசப்ப கவுண்டர் 2.07 1/2 ஏக்கர் சம்பந்தமாக எந்த ஆவணமும் எழுதவில்லை. நத்தத்தில் உள்ள வீடு சம்பந்தமாகவும் சின்ன ராசப்ப கவுண்டர் எந்த

<u>01.09.2025 – அ.வ.எண். 221/2024 பி.சா.2 திரு.செல்லப்பன்</u>

ஆவணமும் எழுதவில்லை. பூமிகளுக்கும் நத்தத்தில் உள்ள வீட்டுக்கும் சின்ன ராசப்ப கவுண்டர் பெயரில் தான் பட்டா உள்ளது என்று சொன்னால் எனக்கு ஞாபகம் இல்லை. அந்த சொத்துக்கள் அனைத்துமே சின்ன ராசப்ப கவுண்டரின் அனைத்து வாரிசுகளுக்கும் பாத்தியப்பட்டு அனைவரின் சுவாதீனத்திலும் உள்ளது என்று சொன்னால் எனக்கு ஞாபகம் இல்லை.

**<u>19 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** இல்லை.

Typed to my dictation as deposed by the witness in Open Court and acknowledged by him / her to be correct.

M E PADMA

Digitally signed by M E PADMA
Date: 2025.09.01 19:50:10 +0530

**I Additional District and Sessions Judge,**

**Tiruppur.**